# முத்தமிழ் ஆயம் வழங்கும்

## "இலக்கியப்பதாகை" (பறப்பு-1) – 23.02.2018




"முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தான்ஆம்

இன்சொ லினதே அறம்."

எனும் குறளுக்கேற்ப, முகமலர்ச்சியுடனும் அகத்தில் திருக்குறள் சுவாசமுடனும் வாழ்ந்தவர் திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் அவர்கள். அவர்தம் நினைவைப் போற்றும் வகையில், விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்திற்குட்பட்ட ஆறுபடைவீடு தொழிற்நுட்ப வளாகம் -கலை மற்றும் அறிவியல் புலத்தின் சார்பில் ந.மணிமொழியனார் முத்தமிழாயம் என்ற தமிழ் இலக்கிய அமைப்பு இனிதே துவங்கப்பட்டது.

ஒவ்வொரு மாதமும் மூன்றாம் சனிக்கிழமை மதுரை காலேஜ் ஹவுஸ்சில் குறள் நிலாமுற்றம் நடத்தி தமிழ்ப்பணி செய்த திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனாரின் வழியில், "இலக்கியப்பதாகை" என்ற பெயரில் மாதந்தோறும் மூன்றாவது வெள்ளிக்கிழமையில் இலக்கிய நிகழ்வுகள் நடைபெற, முத்தமிழாயம் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதல் நிகழ்வாக பிப்ரவரி-23 அன்று “இலக்கியப்பதாகை” (பறப்பு-1) நிகழ்வு நடந்தேறியது.




இவ்விழா மேதகு டாக்டர்.அ.ச.கணேசன் (வேந்தர்) மற்றும், டாக்டர்.அனுராதா கணேசன் (இயக்குநர்)

விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம், தலைமையில் நடந்தது.

திரு. ரீனா ஷாலினி (பதிப்பாசிரியர், எழுத்தாளர் -காலச்சுவடு பதிப்பகம்) அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு “தமிழின் நவீன வடிவங்கள்” குறித்து மாணவர்களிடம் உரையாற்றினார். அதில் மாணவர்கள் மரபு தமிழுக்கும், நடைமுறை தமிழுக்கும் உள்ள வேறுபாடு மற்றும் தமிழின் புதுப்பரிணாமங்கள், நவீன நாடகங்கள், தெருக்கூத்து, கானாப்பாடல், பத்திரிக்கைக்கலை, நவீன கவிதை, கதைகள் ஆகிய பல்வேறு தளத்திலிருந்து அவற்றின் சில உட்கூறுகளை அழகான எளிய தமிழில் மாணவர்களுக்கு ஆர்வமூட்டும்படி உரையாற்றினார். இவரை கவிஞர் பிருந்தா அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

முன்னிலையாக முனைவர் ஆர்.சண்முகவள்ளி (இயக்குநர்) கலை மற்றும் அறிவியல் புலம். அவர்கள் முன்னிலை வகித்து விழாவினை சிறப்பித்தார்.

வாழ்த்துரையினை முனைவர் மு.பொன்னவைக்கோ (முதன்மை கல்வி அதிகாரி) விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் அவர்கள் வழங்கினார்.

மாணவ மாணவியர்கள் ஐயங்களை கேட்டு நிவர்த்தியடைந்தனர். தமிழ், மொழி மட்டும் அல்ல. அது நமது உணர்வுகள் காட்டும் பிம்பம். தாய்மொழி வழி

செம்மையான படைப்பாற்றலுக்கு, உணர்வுகள் மிகவும் தேவை என்பதை மாணவர்கள் உணர்ந்தமையினை தமது பின்னூட்ட கருத்துக்களின் வாயிலாக புலப்படுத்தினர். தமிழ்த்துறை சார்பில் முனைவர் ப.ஜெயபாரதி (துறைத்தலைவர்), திரு. அ.முத்துக்குமார் (உதவிப்பேராசிரியர்) ஆகியோர் விழா ஏற்பாடு செய்திருந்தனர்.



இவ்விழா, மாணவ மாணவியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள், அனைத்து துறை சார்ந்த பேராசிரிய பெருமக்களின் ஆதரவுடன் இனிதே நிறைவு பெற்றது.

~~~~~*****~~~~
~~~~~